104

104

328

யெகோவா பக்தன்மார்க்குள்ள

சந்தோஷகீதங்கள்

328

"யகோவய்க்கு புதியொரு பாட்டும் பக்தன்மாருடெ
சபையில் அவன்றெ ஸ்துதியும் பாடுவின்"

264.1

29 APR 1942
MADRAS

PUBLISED BY
சந்நியாசினி பொன்னம்மாள்,
இண்டியன் காஸ்பல் ற்றீம்
இம்மானுவேல் மந்திரம்
கோயமுத்தூர்

SATYA PRINTING PRESS,
NAZARETH.
1942.

22-ம் பதிப்பு] [2000 காப்பி.

Q6: 4146/01

சந்தோஷ கீதங்கள்

(1)

1 என்ன சந்தோஷம்! இது என்ன சந்தோஷம்!
எனக்கிங்கும் சந்தோஷம் எனக்கங்கும் சந்தோஷம்!
2 என்ன மஹிமை! இது என்ன மஹிமை!
எனக்கிங்கும் மஹிமை எனக்கங்கும் மஹிமை!
3 என்ன ஆனந்தம்! இது என்ன ஆனந்தம்!
எனக்கிங்கும் ஆனந்தம் எனக்கங்கும் ஆனந்தம்!
4 என்ன பாக்கியமோ! இது என்ன பாக்கியமோ!
எனக்கிங்கும் பாக்கியமே எனக்கங்கும் பாக்கியமே!
5 என்ன ஸ்வர்க்கமோ! இது என்ன ஸ்வர்க்கமோ!
எனக்கிங்கும் ஸ்வர்க்கமே எனக்கங்கும் ஸ்வர்க்கமே!

(2)

1 யேசுவைப்போல் நல்ல நேசருண்டோ
இல்லையே, இல்லையே,
ஆத்துமநோய் தீர்க்கும் வைத்யருண்டோ
இல்லையே, இல்லையே,

பல்லவி.

யேசு நேசரறிவாரென்னை
என்றும் என்னோடிருப்பாரே— யேசு

2 ஏசையர் மேன்மைக்கோர் நிகருண்டோ
இல்லையே, இல்லையே,
ராஜனின் தாழ்மைக்கோர் ஒப்புமுண்டோ
இல்லையே, இல்லையே— யேசு

3 எப்பொழுதாயினும் கைவிடுவாரோ
இல்லையே, இல்லையே,
காரிருளில் அவர் நீங்குவாரோ
இல்லையே, இல்லையே— யேசு

4 யாரும் அவரில் ஏமாந்ததுண்டோ
இல்லையே, இல்லையே,
எப்பாவியும் தள்ளப் பட்டதுண்டோ
இல்லையே, இல்லையே— யேசு

5 யேசுவைப்போல் மீட்பரெங்குமில்லை
இல்லையே, இல்லையே,
அன்பரில் அன்பர் வேருருமில்லை
இல்லையே, இல்லையே— யேசு

323

(3)

1 பரிசுத்தர் கூட்டம் இயேசுவைப் போற்றி
பாடி மகிழ்ந்தாடியங்கே கூடிட
பரமானந்த கீதமங்கெழும்ப
நீயங்கிருப்பாயோ சொல் என் மனமே?
நானங்கிருப்பேனே என் இயேசுவோடு.

2 ஆட்டுக்குட்டியும் அரசாக்ஷி செய்ய
அண்டினோரெவரும் அவரைச் சேர
அன்பர் அன்றெல்லார் கண்ணீர் துடைக்க
நீயங்கிருப்பாயோ சொல் என் மனமே?
நானங்கிருப்பேனே என் இயேசுவோடு.

3 பேதுரு பவுலும் யோவானுமங்கே
பின்னும் முற்பிதாக்கள் அப்போஸ்தலரும்
ரத்தசாக்ஷிகளும் திரளாய்க் கூட
நீயங்கிருப்பாயோ சொல் என் மனமே?
நானங்கிருப்பேனே என் இயேசுவோடு.

4 ஜெகத்தில் சிலுவை சுமந்தோரெல்லாம்
திருமுடி யணிந்திலங்கிடவும்
தேவ சேயர்களா யெல்லாரும் மாற
நீயங்கிருப்பாயோ சொல் என் மனமே?
நானங்கிருப்பேனே என் இயேசுவோடு.

5 சோதனைகளை வென்றவர் எவரும்
துன்பம் தொல்லைதனைச் சகித்தவரும்
ஜோதி ரூபமாய் சொர்லோகில் ஜொலிக்க
நீயங்கிருப்பாயோ சொல் என் மனமே?
நானங்கிருப்பேனே என் இயேசுவோடு.

6 கன்னிகையைப் போல் கர்த்தன் சபை அன்று
மன்னர் மணாளனேசுவை மணந்து
பின்னும் சொல்லரிதாம் நிலை ருசிக்க
நீயங்கிருப்பாயோ சொல் என் மனமே?
நானங்கிருப்பேனே என் இயேசுவோடு.

(4)

1 இயேசு ராஜன் வருவார் தூதரோடும் வருவார்
பக்தரை வானத்தில் சேர்த்திடவே — நான்
ஜோதியாய் அவர் முகம் கண்டிடுவேன் — பின்னும்
ஜெய ஜெயபீரம் கொண்டுளம் பொங்கிடுமே— இயேசு

2 மணவாளனோடு மணவாட்டியாம் சபை
மங்களமாய்க் கவி சாற்றிடுமே — அப்போ
மாட்சிமையோடு நாம் பாடிடுவோம் — அவர்
நேசத்தின் ஆழத்தை ருசித்திடுவோம்— இயேசு

3 முத்திரையிட்ட சுத்தர்கள் வெள்ளையங்கி தரித்து
கர்த்தர் சமுகத்தில் நின்றிடுவார் — அதில்
சேர்ந்திடுவேன் நானும் பாடிடுவேன் — அன்று
பொற்கிரீடம் தரித்தாடிடுவேன்— இயேசு

4 காதலித்தேன் நான், காசினியின் இன்பம் விட்டு
கர்த்தரோடென்று முறவாடிட — அங்கு
கனக மணவறை ஜொலித்திடுமே — அப்போ
கர்த்தராம் இயேசுவில் சுகிப்போமே — இயேசு

5 வானத்தில் எக்காளம் தொனித்திடும் சமயத்தில்
சுத்தர்கள் யாவரும் பறந்திடுவார் — அப்போ
அத்தனின் கலியாண விருந்ததிலே — நாமும்
நித்தம் அவரோடார்ப்பரிப்போமே— இயேசு

(5)

1 பாவத்தின் பலன் நரகம் ஓ பாவி நடுங்கிடாயோ?
காண்பதெல்லாம் அழியும் காணுதல்லோ நித்தியம்

பல்லவி.

இயேசுராஜா வருவார்
இன்னும் கொஞ்சங்காலம் தான்
மோக்ஷலோகம் சேர்ந்திடுவோம்.

2 உலக இன்பம் நம்பாதே
அதின் இச்சை யாவும் ஒழியும்
உன் ஜீவன் போகும் நாளிலே
ஓர் காசும் கூட வராதே— இயேசு

OFFICE OF THE REGISTRAR OF ASSTS
29 APR 1942
MADRAS

3 உன் காலம் எல்லாம் போகுதே
உலக மாய்கையிலே
ஓ! தேவ கோபம் வரும் முன்
உன் மீட்பரண்டை வாராயோ— இயேசு

4 தேவனன்பின் வெள்ளம் ஓடுதே
கல்வாரி மலை தன்னிலே
உன் பாவம் யாவும் நீங்கிப்போம்
அதில் ஸ்நானம் செய்வதாலே— இயேசு

5 மா பாவியான என்னையும்
என் நேசர் ஏற்றுக்கொண்டாரே
ஓ! பாவி நீயும் ஓடிவா
தேவாசீர்வாதம் பெறுவாய்— இயேசு

(6)

மகிமையுள்ள மா ஏசுராஜன்
வானதூத சேனைகளோடு
சீக்கிரம் வருகின்றார் ஆனந்தமாமே.

1 பூமியும் அதிசயிக்க வானோர்கள் ஆர்ப்பரிக்க
தூதரொளியுடன் மேகமதில் வாரார்
ஏழை நாங்கள் இயேசுவை சந்திப்போம்
ஆ ஆ ஆ ஆ ஆனந்தமாமே— மகிமை

2 எக்காளம் தான் தொனிக்க வாஞ்சைகள் யாவும் தீர
நண்பரின் பக்கத்தில் யாவரும் கூடியே
ஆனந்தம் பாடி நாம் ஏசுவைப் போற்றிட
ஆ ஆ ஆ ஆ ஆனந்தமாமே— மகிமை

3 பூமியின் ஜாதிகளும் தேசத்தின் ராஜாக்களும்
மனுவேல் ராஜனால் நியாயத்தீர்ப்படைய
அன்பார்ந்த நாங்கள் இயேசுவுடன் நிற்போம்
ஆ ஆ ஆ ஆ ஆனந்தமாமே— மகிமை

4 ஆயிரம் ஆண்டுகளும் பூமியின் ஆட்சிகளும்
முற்றுமாய்த் தீர்ந்தபின் அன்பருடன் நாங்கள்
நித்தியம் ஜீவித்து ஆளுகை செய்திடுவோம்
ஆ ஆ ஆ ஆ ஆனந்தமாமே— மகிமை

(7)

சேர்வோம் நாம் பாக்கிய நாடதில்
சேர்வோம் நாம் பாக்கிய நாடதில்
சேர்வோம் நாம் பாக்கிய நாடதில்
நாம் பாடுவோம் கீதம்

1 சாவு இல்லை ராத்திரியும் பாக்கிய நாடதில் (3 times)
நாம் பாடுவோம் கீதம்

2 வியாதி களைப்பில்லையே பாக்கிய நாடதில் ,,
நாம் பாடுவோம் கீதம்

3 பாவம் பயம் இல்லையே பாக்கிய நாடதில் ,,
நாம் பாடுவோம் கீதம்

4 எண்ணில்லாத சுத்தராம் பாக்கிய நாடதில் ,,
நாம் பாடுவோம் கீதம்

5 வீணை யுண்டு கானமும் பாக்கிய நாடதில் ,,
நாம் பாடுவோம் கீதம்

6 காண்போம் இயேசு ராஜனை பாக்கிய நாடதில் ,,
நாம் பாடுவோம் கீதம்

7 பொன் கிரீடம் சூடுவோம் பாக்கிய நாடதில் ,,
நாம் பாடுவோம் கீதம்

8 மகிமையில் நாம் வாழுவோம் பாக்கிய நாடதில்,,
நாம் பாடுவோம் கீதம்

(8)

பல்லவி.

விலைமதியா ரத்தத்தால்
மீட்க்கப்பட்டீரே

சரணங்கள்.

1 உலையும் பொன் வெள்ளி
உலோகத்தாலல்ல, — ரீ-ரீ-ரீ-ரீ
சிலுவையிலேசுபரன் — படும்
வலு கொலையாலுதிரும் — விலை

2 நீருமக்குரிமை
ஏதினியிலையே — ரீ-ரீ-ரீ-ரீ
சீர்மணமகனுடைமை — நீவிர்
ஓர்ந்துணர்வது கடமை — விலை

3 ஆகங்களவர்க்கு
ஆலயமல்லவோ? — ரீ-ரீ-ரீ-ரீ
அசுத்தம் படலாகாதே — நன்மை
வசிக்கும் தலமதாமே — விலை

4 ஆவியுந்தேவன்
அகமது தானே, — ரீ-ரீ-ரீ-ரீ
தேவ துதிகளதிலே — எழச்
செய்வீர் தினமுமிகவே — விலை

(9)

பல்லவி. அன்பின் முரசு அகிலத்தில் கேட்கிற முழக்கம்
ஆண்டவர் சிலுவை நேசரால்

சரணங்கள்.

1 மாண்ட இருதயங்களுக்குள் ஜீவனை வைத்தார்
மாந்தரின் நம்பிக்கையை மகிழச் செய்தார்
அற்புதத்தை அகிலத்தில் அறிவித்தார்
அறையுண்ட சிலுவை நேசர்தாமே. அன்பின்

2 சிலுவையில் சிரேசு ஜீவனை விட்டார்
சஞ்சலங்களினின்றும் விடுதலை ஈந்தார்
அன்பின் பாத்திரத்தை யேசு அளித்தார்
அறையுண்ட சிலுவை நேசர்தாமே. அன்பின்

3 கபோதிகட்குக் கண்களைக் கொடுத்தார்
காலில்லாத ஊனர்க்குக் காலை ஈந்தார்
காட்சியைக் கர்த்தர் யேசு காட்டினார்
கடாவப்பட்ட சிலுவை நேசர்தாமே, அன்பின்

4 தூக்க மயக்கங் கொண்ட சுத்த சோம்பேறியை
சும்மா ஜீவியத்தைப் போக்கும் சுக ஜீவியை
சுத்தர் யேசு கர்த்தர் முற்றுங் கலைத்தார்
சுதன் சுவிசேஷ சிலுவை நேசர்தாமே. அன்பின்

5 அன்பாகவே அழைக்கிறார் அனைவரையும்
அலையும் அசடர்கட்கு வழியையும்
காசினியோர்கண்டு வாசிக்கவும்
கடாட்சித்தார் சிலுவை நேசர்தாமே. அன்பின்

(10)

1 உன்னத வீட்டை சீக்கிரம் சென்று
அன்பரைச் சேர்ந்திடுவேன்
இயேசு இரட்சகர் ஏழையின் வாஞ்சை
யாவையும் தீர்த்திடுவார்.

2 தூதரின் மத்தியில் மகிழ் கொண்டாடிட
தேவனைப் போற்றிடுவேன்
கமிழ் வாசனை வீசும் பூக்களின் மத்தியில்
இன்பமாய் அயர்ந்திடுவேன்.

3 வானோர்கள் பலபல ஊழியம் செய்ய
ஏழையும் சேர்ந்து கொள்வேன்
என் இயேசுவின் துதியை நாவினால் பாடிட
நேசரால் அகமகிழ்வேன்.

4 பளிங்கு நதியின் ஓரங்களில் நான்
ஓடியுலாவிடுவேன்
பொன் வீதியில் நானும் அன்பருடனே
கவியுடன் அடியெடுப்பேன்.

5 மிதமிஞ்சி சோதனை எதிரிட்டு வந்தாலும்
ஒன்றுக்கும் அஞ்சமாட்டேன்
சிங்கம் புதரின்றேகியே எதிர்க்கினும்
அதனையும் ஜெயித்திடுவேன்.

6 பறவைகள் அதிகம் விருக்ஷங்கள் அதிகம்
கானும் அங்கே உண்டு
பராபரன் தாமே எனக்காகச் சேர்த்த
பொருட்களும் மெத்த உண்டு.

7 பேதுரு யோவான் பவுலும் கூட
அங்கே ஓய்ந்திருப்பார்
என் இயேசுவின்வீட்டில் மகாபெரும் இன்பம்
ஆ! ஆ! ஆனந்தமே.

8 ஆறுநாள் உலகை அழகாய்ப் படைத்து
ஏழினில் ஓய்ந்திருந்தார்
ஆறுவேன் தேறுவேன் ஆர்ப்பரிப்புடனே
அன்பரிலகமகிழ்வேன்.

(11)

பல்லவி. பிரிய இயேசுவின் சேனை வீரர்கள் நாம்
சேனை வீரர்கள் நாம் சேனை வீரர்கள் நாம்
சிலுவை தோளில் சுமந்துபோகலாம்
சேனை வீரர்கள் நாம் சேனை வீரர்கள் நாம்

சரணங்கள்

1 நம் தேவன் சமாதான பிரபுவே
நம் சர்வாயுதவர்க்கம் தாழ்மைதானே
நம் ஆத்மசகாயர் அவரே
சேனை வீரர்கள் நாம் சேனை வீரர்கள் நாம்—பிரிய

2 எப்போதும் ஏசுவை தியானிப்போம்
எல்லோரும் ஜீவியத்தைத் தியாகம் செய்வோம்
ஏசுவின்மகா அன்புக்காய்த் தத்தம் செய்வோம்
சேனை வீரர்கள் நாம் சேனை வீரர்கள் நாம்—பிரிய

3 ஏசுகிறிஸ்துவின் அன்புக்காய் இறந்திடுவோம்
புல் பூண்டுமேயானாலும் புசித்திடு வோம்
முன்வைத்த காலைப்பின் வைக்கமாட்டோம்
சேனை வீரர்கள் நாம் சேனை வீரர்கள் நாம்— பிரிய

4 உலக நேசத்தின் ஊற்றை உடைத்துவிட்டோம்
உள்ள மாயைகளையெல்லாம் ஒழித்து விட்டோம்
உள்ளத்தையெல்லாம் உடையவர்க்கொதிக்கிவிட்டோம்
சேனை வீரர்கள் நாம் சேனை வீரர்கள் நாம்— பிரிய

5 இதொன்றே ரட்சண்ய வழியென்றுணர்ந்தோம்
இதை இருதயத்திலிறுக இணைத்து விட்டோம்
ஒன்றாயுயிர்வாழ்வோம் இன்றே உயிர்விடுவோம்
சேனை வீரர்கள் நாம் சேனை வீரர்கள் நாம்— பிரிய

6 சாத்தான் கோட்டைகளை யெல்லாம் தகர்த்திடுவோம்
தக்கசமயத்தில் சத்தியத்தைச் சாற்றிடுவோம்
சற்றும் தயங்காமல் சாட்சியைத் தந்திடுவோம்
சேனை வீரர்கள் நாம் சேனை வீரர்கள் நாம்— பிரிய

7 அல்லேலூயா ஜெயத்தை அறிவித்திடுவோம்
அவர் வருகையைப்பற்றி யுரைத்திடுவோம்
அந்தகார ஆதிக்கங்களை அவமாக்குவோம்
சேனை வீரர்கள் நாம் சேனை வீரர்கள் நாம்— பிரிய

(12)

1 தேவா தேவா திரிலோக நாதா
லோகோத் தாரக கிறிஸ்து தேவா
தாஸராம் எங்களை காத்து ரக்ஷிக்கணே—தேவா

2 ஆழிமீதே நடந்த தேவா
அஞ்சப்பங் கொண்டஞ் ஐய்யாயிரத்தே
அதிசயகரமாய்ப் போஷிப்பிச்சவனே— தேவா

3 கானாயிலே கல்யாண விருந்தில்
சுத்த ஜலத்தை வீஞ்ஞாக்கித்தீர்த்த
கருணாநிதியே கனியணம் தினவும்— தேவா

4 நாதா நீ மாத்திரம் கதியே
ஆர்தா ஜனங்கள்க் கேகாலம்பம்
நீயன்னியே ஆருள்ளு தீனதயாளா— தேவா

5 நின்றெ ராஜ்யம் வேகம் வரணம்
நித்தியானந்த மோக்ஷம் சேரான்
பக்தராம் தாஸரே அனுக்கிரகிச்சீடணே— தேவா

(13)

பல்லவி

எந்தன் பூமானைக் காணசிந்தை பெருகுதையோ
என்றைக்குக் காண்பேனோ.

சரணங்கள்

1 சுந்தரத்தில் மிகுந்து அந்தரங்கத்திருக்கும்
எந்தன் பூமானைக் காண—அழகுடைய
அண்ணல் இயேசுவைக் காண— எந்தன்

2 விண்ணிலிருந்தவர் மண்ணின்மேல் வந்தவர்
கன்னிகையில் பிறந்தவர்—லாசருக்காக
கண்ணீரை விட்டழுதவர்— எந்தன்

3 இன்னும் வர என்னத் தாமதம் செல்லுமோ
சொன்ன வாக்கை நினைந்து—அடியேனுந்தன்
பாதம்பணிந்து வந்தேன்— எந்தன்

4 பொல்லாதோரை இரக்ஷிக்க வல்ல பராபரன்
என்ன துயரடைந்தார்—அதை நினைத்தால்
சொல்ல முடியுதில்லை— எந்தன்

5 கன்னத்தில் அடிபட்டுக் கண்ணீர் விடும் வேளை
என்னை நினைத்தீரோ நீர்—அதை நினைத்தால்
உம்மை மறப்பேனோ நான்— எந்தன்

(14)

1 ராஜன் முன்பில் நில்க்கும் நாம் பொன் முடி சூடி
ப்ருபிக்கும் நித்யானந்தம் நித்ய ஜீவனும்

பல்லவி. ஹல்லெலூயா கீதம் பாடிடும் நாம்
ஹல்லெலூயா கீதம் பாடிடும் நாம்
பாடிடும் நாம் பாடிடும் நாம்
ஹல்லெலூயா கீதம்

2 அன்புள்ளேசு தம்புரான் மும்பில் சேரும்போள்
துன்பமெல்லாம் மின்பமாய்த் தீரும் நிர்ணயம்— ஹல்

3 ம்றுத்யுவில்லா ஸ்வர்புரே சத்ரு பீதியும்
தத்ர கர்த்தன் நம்முடெ மித்ரமாயிடும்— ஹல்

4 விண்ணில் சேரும் சுத்தரின் கண்ணு நீரெல்லாம்
மண்ணில் வந்த புண்யவான் அந்று நீக்கிடும்— ஹல்

5 வீணாநாதம் தூதரின் இன்ப கானவும்
வானில் முழங்கிடும் நாம் பாடும் கீர்த்தனம்— ஹல்

6 தெய்வமக்கள் ஸர்வரும் ஒக்நாய் வாணிடும்
தேவநக்நன் தன்னுடெ பொன்னு ராஜ்யத்தில்— ஹல்

பல்லவிகள்.

(15)

1 அல்லேலூயா எசுவே கல்வாரியில் மாண்டவரே
அல்லேலூயா அல்லேலூயா அல்லேலூயா ஆமென்
2 அடக்கம் பண்ணப்பட்டவரே அல்லேலூயா (3 தரம்)
3 உயிரோடெழுந்தவரே ,,
4 சாத்தானை வென்றவரே ,,
5 பரலோகஞ் சென்றவரே ,,
6 பரிந்தே பேசுபவரே ,,
7 திரும்ப வருபவரே ,,
8 பரம பரிகாரியே ,,
9 என்றும் மாருதவரே ,,
10 உலகத்தின் ரட்சகரே ,,

(16)

வேதத்திலே வேதத்திலே எப்பக்கம் பார்த்தாலும்
இரக்கத்தைக் காண்பாய்
துக்கம் துயரத்திலும் தூயர் வாக்கிதுவே
சோராமல் சொந்தமாய் நம்புவாயாக

(17)

அல்லேலூயா, அல்லேலூயா, அல்லேலூயா
அல்லேலூயா, அல்லேலூயா, அல்லேலூயா
அல்லேலூயா, அல்லேலூயா
அல்லேலூயா அல்லேலூயா, அல்லேலூயா
அல்லேலூயா ஆமென், ஆமென்
அல்லேலூயா ஆமென், அல்லேலூயா ஆமென்
அல்லேலூயா ஆமென், அல்லேலூயா ஆமென்
அல்லேலூயா ஆமென்

CHORUSES.

A little talk with Jesus makes it right, all right;
A little talk with Jesus makes it right, all right;
In trials of every kind, praise God, I always fiind
A little talk with Jesus makes it right, all right.

All, all, all of my heart for Jesus, my wonderful Saviour
Just as it is, for ever it's His; Yes, all of my life for Jesus.

"All the world for Jesus", let the chorus ring;
"All the world for Jesus", Crown Him King;
"All the world for Jesus", let the watch-word be;
"Forward go in Jesus" Name to Victory".

Hallelujah!......hallelujah!......hallelujah for the cross
Hallelujah!......hallelujah.........
It shall never.........suffer.........loss!
Hallelujah......hallelujah......hallelujah for the cross!
Hallelujah ! hallelujah !
It shall never suffer loss !

---

(18)

பல்லவி. எந்தன் ஆத்மநேசர் எங்கே

அனுபல்லவி.

அவர் எங்கே—அவர் எங்கே
அவர் எங்கே, எங்கே, எங்கே, எங்கே—எந்தன்

சரணங்கள்.

1. நகரத்தின் தெருவீதி சென்று
நான் நலமுடன் தேடினேன் நின்று
ஐயோ தேடியும் காணாமல் இன்று
முகம்வாடி மயங்குகிறேன் நின்று— எந்தன்

2. காட்டுமரங்களில் தானும்
நல்ல கிச்சிலி மரம் போல தோணும்
நல்ல குமாரருக்குள்ளே இவர் தானும்
குடியிருப்பதுபோலவே தோணும்— எந்தன்

3. பதினாயிரம் பேரில் சிறந்தோர்
அதிவெண்மை சிவப்பு நிறமானோர்
தலை பொன்மயமாய் விளங்கிடுமே
மயிர் சுருள் சுருளாயிருப்பவரே— எந்தன்

4. லீபனோன் போலவர் ரூபம்
மிக மதுரமவர் வாயின் வசனம்
லீலிபுஷ்பங்கள் போன்றவருதட்டில்
நின்று வாசனை வெள்ளைப்போளம்வடியும்— எந்தன்

5. இடதுகை என் தலைகீழ் வைத்து
அவர் வலதுகையாலரவணைத்து
என்னை மனதாய் அணைத்துக்கொள்வதாலே
நான் சோகமடைவேன் நேசத்தாலே— எந்தன்

(19)

பல்லவி.

எப்போதுமே (3 தடவை) இன்ப வாழ்வே
இயேசையா என்னோடிருப்பதாலே

1 எப்பொருளுங்குப்பைபோன்றனவே—மாந்தர்
எல்லாரும் ஓர் நாளில் தூசிதானே,
என்னருமை நேச இயேசு
எனக்கெல்லாம் அவர்பின்னேயெனக்கேது குறை—எப்

2 மாதாபிதா உற்றார் மாண்டிட்டாலும் – பின்னும்
மற்றுள்ள இஷ்டர் மறந்திட்டாலும்,
மன்னர் கிறிஸ்தேசு மங்கா நேசர்
எனக்கென்ன குறை எனக்கேதிபீடை— எப்

3 காவற்காரர் இயேசு கண்ணுறங்கார்--என்மேல்
ஆவல் மிகுந்தோர் அன்பு மிகுந்தோர்
பட்டயத்தார் பக்கத்தாயிரம் ஆயினும்
பயந்திடேன் சற்றும் அயர்ந்திடேன்— எப்

4 எத்தனையாய் மாந்தர் தூஷித்தாலும்—பின்னும்
இகழ்ந்தே என்பேரைக் கெடுத்திட்டாலும்,
ஏதும் சொல்லேன் நாவெழும்ப விடேன்
கிறிஸ்தேசையர் போலவர்க்கிரங்கிடுவேன்— எப்

5 நிற்பேன் என் நேசர் கரம் பிடிப்பேன்—சாத்தான்
நிற்காதோடிமறைவான் பிடிப்பேன்
வீற்பிடிப்பேன் ஜெய வெற்றிகொள்வேன்—அதி
அற்புதசக்தியால் தீரனுவேன்— எப்

6 தங்குமிடம் பூமி சத்திரமே—விண்ணின்
தங்க வீட்டின் வாழ்வு நித்தியமே;
மங்கா வாழ்வு எனக்கங்கேயுண்டு
பின்னே இங்கே எதை எந்தன் பங்கெனுவேன்— எப்

7 என்ன நஷ்டம் தொல்லே துன்பம் வந்தும்—சாத்தான்
ஏக படையாய் எனைச் சூழ்ந்தாலும்
என்ன பயம் அதால் ஏதபாயம்
எனக்கேசு துணை சேனு வீரரவர்— எப்

8 ஆதரவானோர் அருமையானோர்—இந்தப்
பூதலம் விட்டோடிப் போனுலுமே;
ஆதரவா யேசை அண்டிச்செல்ல
ஏவல் ஆகும் ஆகும் அது எப்போதும்— எப்

(20)

1 வந்நிடேணம் வந்நிடேணம் தேவா
வரம் தந்நிடேணம் அடியார்க்கிந்நேரம்
நந்நியோடே நின்ஸ் துதிகள் இந்நிவிடே பாடிடுவான்
வேணம் க்ருபா வேணம்— வந்

2 சிந்தையென்னியே அந்ததயில் வாழும்
எங்கள் சொந்த ஜனத்தோடு சுவிசேஷம்
சந்தமோடறியிச்சிடான் சொந்த ஆல்மதானமிப்போள்
வேணம் க்ருபா வேணம்— வந்

(21)

விழித்திரு விழித்திரு வெளிச்சம் உதிக்கும்
உண்மையாய் உதிக்கும் உன் பேரில் உதிக்கும்
என் பேரில் உதிக்கும்

1 விழித்திரு விவேகமாய்
சோதனையிலகப்படாய்
வேந்தன் இயேசுக் கற்பனையைக்
கைக்கொள்வாயே கிறிஸ்தவனே— விழி

2 விழித்திரு பயமின்றி
அரையில் கச்சைக் கட்டி
வேந்தன் இயேசுக் கற்பனையைக்
கைக்கொள்வாயே கிறிஸ்தவனே— விழி

3 விழித்திரு வெட்கமின்றி
எழும்பி எங்கும் பிரகாசி
வேந்தன் யேசு கற்பனையைக்
கைக்கொள்வாயே கிறிஸ்தவனே— விழி

4 விழித்திரு தைரியமாய்
எங்கும் சிலுவை சுமந்து
வேந்தன் யேசு கற்பனையைக்
கைக்கொள்வாயே கிறிஸ்தவனே— விழி

5 விழித்திரு நித்திரையின்றி
நிந்தையை நிதம் சகித்து
வேந்தன் யேசு கற்பனையைக்
கைக்கொள்வாயே கிறிஸ்தவனே— விழி

6 விழித்திரு வேலை செய்து
வேறெதையும் விரும்பாதே
வேந்தன் இயேசு கற்பனையைக்
கைக்கொள்வாயே கிறிஸ்தவனே— விழி

7 விழித்திரு தோத்ரம் செய்து
அல்லேலூயாப் பாடிக்கொண்டு
வேந்தன் யேசு கற்பனையைக்
கைக்கொள்வாயே கிறிஸ்தவனே— விழி

(22)

பல்லவி.

வரவேணும் பரனுவியே இறங்கும் தணலாய்த்தாவியே

அனுபல்லவி.

மருளாம் பாவம் மருவிய என்னை
வானுக்கினியால் பரிசுத்தம் செய்ய

சரணங்கள்.

1 பலமான எப்பாவமும் பாழாக்கும் மாநோய்களும்
வலிய கொடும் ரோகமும் மாம்ச சிந்தையோடுமே
பலிபீடத்தில் என்னை பலியாக வைத்தேன்
எலியாவின் ஜெபத்திற்கு இறங்கிய வண்ணமே— வர

2 எந்தன் பாவம் யாவையும் எரிக்கும் வகை தேடியும்
எங்கும் இந்த லோகத்தில் எத்தீயுமே காண்கிலேன்
எந்தன் செயலால் யாதொன்றும் முடியா
இன்றே வானுக்கினி வர வேணுமே — வர

3 குடிகொள் எந்தப்பாவமும் அடியோடே தொலைத்திடும்
தடுத்தாள் கொள்ளும் தோஷமும் சாம்பலாகச்செய்திடும்
படிமிசை காற்றுக்குப் பறந்தோடும் சாம்பல் போல்
அடியேன் யேசுக்காய் ஓடி எங்கும் தொண்டுசெய்ய—வர

(23)

பல்லவி.

பாவியே நீ போகும்போது கூட வருவதென்ன
கூட வருவதென்ன கொண்டு நீ வந்ததென்ன

1 ஆடுமாடு நன்செய் புன்செய் வீடுவாசல் தான்வருமோ
பாடுபட்டு லாயக்காய் தேடும் பணம் வருமோ— பாவி

2 உத்தியோக மதிப்புகளும் பி. ஏ. எம். ஏ., பட்டங்களும்
மெத்தவே அரையில் கட்டும் ஆடைகள் தான் வருமோ—

3 மாயை மாயை மாயை என்று சொல்லுகிறான் பிரசங்கி
ஞாயமாய்த் தீர்ப்புச்செய்தார் ஞானி சாலமோன் தானே—

4 தேடு நீ கண்டடைவாய் தட்டுத்திறப்பேனென்றார்
கேளு கொடுப்பேனென்றார் கேட்டவரம் தருவார்—பாவி

(24)

பல்லவி

உன் தேவனை சந்திக்க நீ ஆயத்தமா?

சரணங்கள்

1 பூவில் ஏசு வரும்போது பொல்லாரோடிடுவார்
இந்தவிதம் நீ இருந்தால் என்ன செய்திடுவாய்— உன்

2 மேகங்களுடன் வருவேனென்று சொன்னவர்
இப்போ மேகந்தனில் வருந்நேரம் கிட்டிச்சேருதே— உன்

3 தேவதூதரோடும் பெரும் எக்காளத்தோடும்
தம் பக்தரைச் சந்திக்குந் நேரம் கிட்டிச் சேருதே— உன்

4 அவபக்தர் அக்காலத்தில் அழுதிடுவார்
அவர் வரும்போது ரக்ஷிப்படையமாட்டார்— உன்

5 பாவங்களில் ஜீவிப்பவர் பதுங்கிடுவார்
பரிசுத்தமாக்கப்பட்டோர் பறந்திடுவார்— உன்

6 இரக்கமுள்ள இந்தநாளில் மனந்திரும்பு
இந்நிமிஷம் ஏற்றுக்கொள்ளும் மன்னிப்புப்பெற— உன்

7 உனக்காய் மரித்த இயேசு காத்து நிற்கிறார்
இயேசு உன்னைப் பட்சமாக ஏற்றுக்கொள்ளுவார்— உன்

8 பரனை ஏற்றுக்கொள்ளாதோர் அந்த நாளிலே
பதுங்கி நித்தியமாகப் பரிதபிப்பார்— உன்

(25)

பல்லவி

எழும்பு சீயோனே இயேசு இதோ வருகிறார் —வேகம்

சரணங்கள்

1 இயேசுவின் வருகை மிகச் சமீபமாகுதே —இனி
மோசந்தான் அசதியாக ஜீவித்து வந்தால் —பின்பு
அலறிடுவாயே இயேசு கைவிடும் போது — வேகம்

2 பூலோக நேசம் உன்னில் சற்றும் வேண்டாமே
மேலோகம் பார்த்து பார்த்து லோகத்தை வெறு —இது
மாய லோகமே உன்னை மோசம் போக்குமே — வேகம்

3 பாவங்கள் இருதயத்தில் ஏதேனுமுண்டோ —சிறு
பாரங்கள் உன்னைக் கீழே தள்ளி விடுமே — உந்தன்
இருதயத்தை நீ பரிசுத்தமாக்காயோ — வேகம்

4 லௌகிக கவலையோடு பெருந்தீனியும் —வெறு
மாமிச சுபாவத்தோடு நான் என்பதுமே —உனை
மோசம் போக்குமே உந்தன் ஆசை அழியுமே — வேகம்

5 மேகத்தில் இயேசு ராஜன் வேகம் வரவே —பரம்
ஏறுவார் பரிசுத்தர் வேறு ரூபமாய் —அன்று
மேக மேறிட நீயும் ஆயத்தந்தானோ — வேகம்

6 ஆகாயத்தில் நடக்கும் கலியாணத்திலே —சுத்தர்
பாடுவார் அல்லேலூயா செட்டை அடித்து — அப்போ
அங்கிருப்பாயோ பூவில் ஓடி ஒளிப்பாயோ — வேகம்

7 அந்திக்கிறிஸ்து அரசாக்ஷி செய்யும் வேளையில் —கோப
அக்கினி பூமியில் சொரியும் வேளையில் —நீயும்
அகப்படாமலே இன்று தப்பிக் கொள்வாயோ — வேகம்

(26)

பல்லவி. வாருமே ஏசு பாதம் சேருமே
பாரில் பாவம் தீருமே

அநுபல்லவி.

வரும் யாரையும் தள்ளேனென்று வாக்கு அன்பாய்க்கூறினாரே

சரணங்கள்.

1 பாவமே அது பொல்லா விஷமே அது உன்னை நாசமாய்
போகச் செய்வதும் தீ நரகினில்
வேகச்செய்யுமே எந்தக்காலமும்— வாருமே

2 மரணமே நினையாத நேரமே பிரிவினை செய்யுமே
தருணம் போக்காதே கிருபை தாங்குது
இது சமயம் தேடு ஜல்தியில்— வாருமே

(27)

பல்லவி இந்நேரம் வந்து என்னை சுத்தஞ் செய்யும்
சுத்தம் செய்யும்—தேவா—சுத்தஞ் செய்யும்

சரணங்கள்

1 பாவ துக்கமெல்லாம் நீங்கிடவே
நீங்கிடவே—சுவாமி—நீங்கிடவே இந்

2 உள் வினை யாவையும் போக்கிடவே
போக்கிடவே—தேவா—போக்கிடவே இந்

3 உம் வாக்கை நம்பி நான் இப்போ வாறேன்
இப்போ வாறேன்—தேவா—இப்போ வாறேன் இந்

4 கல்வாரி ஜீவாறு ஓடுதிப்போ
ஓடுதிப்போ—எனக்காய்—ஓடுதிப்போ இந்

5 இயேசுவின் இரத்தத்தால் சுத்தம் செய்யும்
சுத்தம் செய்யும்--தேவா—சுத்தம் செய்யும் இந்

(28)

பல்லவி

வாராயோ பாவி வாராயோ நீ
என்னிடமாக வாராயோ இப்போ —வாராயோ

அனுபல்லவி

தீராயோக் கலி தீராயோ உந்தன்
தீவினையாவும் தீராயோ —வாராயோ

சரணம்

1 சிலுவை மரத்தில் ஜீவன் வைத்தேன்
சீரடைய உனை அழைத்தேன்
சிந்தின ரத்தத்தால் உந்தனை மீட்டேன்
சிந்தனை இன்றியே எந்தனிடமாக —வாராயோ

2 உந்தன் பாவங்கள் சிவேரென்றிருந்தாலும்
உந்தன் நீதிகள் கந்தை போன்றிருந்தாலும்
பாவக்கறை போய் கந்தைத் துணி போய்
புத்ர பாக்யமடைய பாத்திரனாக —வாராயோ

3 ஜீவன் கொடுத்து திரும்ப எடுத்து
தீரனாக தீவிரமாய்
தேவலோகம் போன என்னை
தேவ மகிமையில் காண்பதற்கு —வாராயோ

(29)

மகனே உன்னை காண்பதற்காய்
அநேக நாளாய்க் காத்திருந்தேன்
மகனே வாடா பொன்மகனே கண்மணியே—யே யே யே

பிரிந்து போன நாள் முதல் நான்
சொரிந்த கண்ணீர் இதுவரையில்
தீரவில்லை தீங்கனியே கண்மணியே —யே யே யே

திரும்ப நீ கிடைப்பாயென்று
நினைத்திலேனே பாருலகில்
மரித்தவன் நீ திரும்ப வந்ததும் —ஓ ஓ ஓ

கெட்டுப் போன என் தனையே
விட்டுவிடவேயிருக்க
கிட்ட என்னை அணைத்துக் கொண்டீரே —ஏ ஏ ஏ

(30)

பல்லவி

என்ன சந்தோஷம் என்ன சந்தோஷம்
என்ன சந்தோஷம் என்ன சந்தோஷம்
மணவாட்டியின் பாட்டைக் கேட்டால்
என்ன சந்தோஷமே.

சரணங்கள்

1 என்ன இவ்விநோதமே அண்டி வந்து பாருமே
அண்ணலுக்குகந்த தோர் கன்னிகையின் ரூபமே
மின்னல் போல் இலங்கிடுதே விண்ணிலழகுடனே—என்

2 மன்னனோடு மகிழுவோம் மனையிலேறி வாழுவோம்
கன்னியர்கள் யாவரும் காதலனைக் காணுவோம்
அன்னையோடு அனந்த காலம் அழிவில்லாதிருப்போம்—

3 பெருகுதே பேரின்பமே பேதைகட்கு இன்றுமே
பேருலகில் யாவுமே வீணதாகத் தோணுதே
வேறுலகில் உண்டெமக்கு என்ன பேரின்பமே—என்

4 ஆ, ஹா இது அதிசயம் அளவில்லாத பரவசம்
சாவில்லாத நித்தியம் நாமுமர சாளுவோம்
பாவ மணுகாத பலன் சாயலணிந்திடுவோம்.— என்

(31)

1 எண்ணில்லாத கூட்டமாக
ஆர்ப்பரிக்கும் இவர் யார்
எல்லா ஜாதிகள் ஒன்றாகக்
கீதம் பாடும் இவர் யார்?

பல்லவி

இவர்கள் தம் ஆடையை
தேவாட்டுக் குட்டியின் இரத்தத்தினில்
தோய்த்து வெண்மை யானோர்கள்
என்றென்றும் வாழ்வார் மோட்சத்தினில்

2 நித்திய சிங்காசனத்தை
சூழ்ந்து மா கெம்பீரமாய்
ஆச்சரிய மீட்பின் அன்பை
கூறுகின்றார் ஏகமாய்.— இவர்கள்

3 பூலோகத்தின் துன்பமற்று
இன்பலோகம் அடைந்தார்
வெற்றிகிரீடம் சூடப்பெற்று
வேந்தராக ஆள்கின்றார்.— இவர்கள்

4 நம்முடைய தேவனாலே
இரட்சிப்பென்று சொல்கின்றார்
நாதர் ஏசுகிறிஸ்துவுக்கு
நமஸ்காரம் செய்கின்றார்.— இவர்கள்

(32)

1 மோட்சம் செல்லும் யாத்ரீகர் நாம் (3 தரம்)—
சிலுவை வீரரே
2 இருள் பள்ளத்தாக்கினூடே (3 தரம்) ,,
3 யேசு பாதை காட்டுகின்றார் (3 தரம்) ,,
4 ஜீவ கிரீடம் ஈந்திடுவார் (3 தரம்) ,,
5 போர்க்கவசம் பூண்டு செல்வோம் (3 தரம்) ,,
6 சோர்ந்திடாமல் முன்னேகுவோம் (3 தரம்) ,,
7 அல்லேலூயா பாடுவோம் நாம் (3 தரம்) ,,

(33)

1 ஏசு சீக்கிரம் வரப்போகிறார் (வெளி. 22: 7, 12)
மாசில்லாதோர் ஆகாயத்தில் மறைந்தே போவார்
(1தெச. 4: 17)
2 கிரியைகளுக்கோ கிரீடங்களே (வெளி. 22: 12)
மரியின் மைந்தனுக்கோ மகுடமாமே (வெளி. 19: 12)
3 அடக்கமா யோடினோர்கழியா கிரீடம் (1 கொ. 9: 25)
ஜீவனைக் கொடுத்தவர்க்கு ஜீவ கிரீடம் (வெளி. 2: 10)
4 ஆத்துமா தாயஞ் செய்தோருக்கு ஆனந்த கிரீடம்
(1 தெச. 2: 19)
மந்தை மேய்த்த வர்களுக்கோ மகிமைக் கிரீடம்
(1 பே. 5: 4)
5 பிரசன்னத்தை வாஞ்சிப்போர்க்கு நீதியின் கிரீடம்
(1 தீ. 4: 8)
பின்னால் விடப்படுவோர்க்கு நித்திய தண்டனை
(யோ. 5: 29)
6 அன்று போன யேசு இன்றுவந்தாலோ (ஆமோ. 4: 12)
நன்று யென்று ஒன்று மின்றியே ஏகுவாயோ
(வெளி. 22:20.)
7 அவரை ரட்சகராய் ஏற்றுக் கொண்டாலோ
அல்லேலூயா பாடிக் கொண்டே ஏகிடுவாயே.

(34)

பல்லவி விழித்தெழுந்திடு திருச்சபையே
மணவாளன் வரக் காலமாகுதே

1 பயங்கர காலம் வரும் என்ருர்ப் போல்
சத்திய வசனந்தான் நிறைவேறுதே
தர்க்கிப் போர்கள் அதிகம் என்று சொன்னுப்போல்
ஜீவனில்லாதவராய் ஆட்கள் ஆகிருர் —விழி

2 லோகமெங்கும் பஞ்சம் காணும், அக்னிபோல்
வேகமாய்ப் படர்ந்து ஜனத்தை யெல்லாம்
வியாகுல சமுத்திர மதில் மூழ்க்கிடும்
யார் பிடித்து ஏற்றுவார் இச்சமயத்தில் —விழி

3 கள்ளனைப் போல் வருவார் மேகமதனில்
வெள்ளை வஸ்திரந்தனில் கறையும் வேண்டாம்
வெள்ளை சிங்காசனத்தில் தானிருக்கும்
தந்தையின் சந்தானம் தம்மைத் துதிக்கும் —விழி

(35)

1 ஓ யேசுவே யென்னை மூட
இரத்தத்தின் கீழ் இரத்தத்தின் கீழ்
பாவமும் நீங்கிப்போய்விட
இரத்தத்தின்கீழ் வையும்

பல்லவி இரத்தத்தின்கீழ் என்னை மூடும்
குற்றங் குறையின்றியாக்கிடும்
நித்தமுமென்னைக் காத்திடும்
இரத்தத்தின்கீழ் வையும்

2 பாவிகள் பிரவேசித்து
இரத்தத்தின்கீழ் இரத்தத்தின் கீழ்
பாவத்தின் மீட்படைய
இரத்தத்தின்கீழ் வையும்

3 ஆவியின் பூரணம் பெற
இரத்தத்தின்கீழ் இரத்தத்தின்கீழ்
ஆத்மாவின் சுத்தியைப் பெற
இரத்தத்தின்கீழ் வையும்

4 இயேசுவே யெந்தன் இன்பமாம்
இரத்தத்தின்கீழ் இத்தத்தின்கீழ்
ஏக சமாதானம் பெற
இரத்தத்தின் கீழ் வையும்

5 இடைவிடாமல் ஜெபித்திட
இரத்தத்தின்கீழ் இரத்தத்தின்கீழ்
எங்குமே சாட்சி அளித்திட
இரத்தத்தின்கீழ் யாவையும்

6 என்றும் வேதத்தை வாசிக்க
இரத்தத்தின்கீழ் இரத்தத்தின்கீழ்
எல்லார்க்கும் வழி காண்பிக்க
இரத்தத்தின கீழ் வையும்

7 அல்லேலூயா கீதம்பாட
இரத்தத்தின்கீழ் இரத்தத்தின்கீழ்
அகிலமெல்லாம் ஜெயங்கூற
இரத்தத்தின் கீழ் வையும்

(36)

1 இயேசுவே என் நேசமுள்ள ஆத்ம நேசரே—என்னை
க்ஷேமமாக வேகம் வந்து சேர்த்துக் கொள்வாரே
ஆசையவரே எந்தன் ஆத்ம நேசரே —இயேசு

2 முட்களுக்குள் நிற்கும் லீலி புஷ்பம் போலவே—இங்கு
மூர்க்கர் என்னை உருக்கமின்றி நெருக்கினாலுமே
அன்பரே யேசு இன்பமாகுதே —இயேசு

3 இத்தரையில் இயேசு வெனக் கினிய கிச்சிலி—உலகில்
புத்திரருள் உத்தமரே முழுதும் என் கலி
புதுமையாகவே அவர் பிரபை வீசுதே —இயேசு

4 நேசமென்னும் கொடி எந்தன் மேல் பறக்குதே—என்னை
சேதமின்றி மீட்கவே என் அண்மை நிற்கிறார்
ஓசை கேட்குதே என் ஆசை அதுவே —இயேசு

5 மரையின்குட்டி போலவே என் அரிய அன்பரே—அவர்
மலைகள் மேடு மீதிலேறித் துள்ளி இன்பமாய்
அலைந்திடாதென்னை அணைத்திடுகிறார் —இயேசு

6 மாரி காலம் சென்று மழை பெய்தொழியுதே—மகா
மாட்சியாக புஷ்பங்களின் காட்சி தோனுதே
ஆட்சி கொள்ளுமேன் வந்து சேர்த்துக் கொள்ளுமேன்—

(37)

பல்லவி

ஆத்ம சுகம் போல ஏது சுகம் பாரில்
பரமாத்ம சுகம் போல ஏது சுகம் பாரில்
ராஜ பிரதாபமோ ஜடசுக ப்ராந்தியோ
மானசுல்லாசமோ ஆல்மீகனெந்தினே